
## இயல் 7.5 - வடிவியல்

பயிற்சி எண் :: 7.5.3.1.I

வடிவியல் (Geometry) - வடிவங்களின் சர்வசமத்தன்மை (Congruence of Shapes) - வரையறை


## வடிவியல் (Geometry) - வடிவங்களின் சர்வசமத்தன்மை (Congruence of Shapes) - வரையறை

### சர்வசமக் கோடுகள்




1) இங்கு காண்பிக்கப்பட்டுள்ள எல்லாக் கோட்டுத்துண்டுகளும் 1 செ.மீ நீளம் உடையவை.
2) இரு கோட்டுத்துண்டுகள் சம நீளம் உடையவை எனில் அவை **சர்வசமம்** எனக்கொள்ளப்படுகின்றன.
3) கோடுகளின் வேறு எந்தப்பரிமாணமும் சர்வசமத்தன்மையை பாதிப்பதில்லை. உதாரணமாக,
   (a) எல்லாக்கோடுகளும் வெவ்வேறு திசையை நோக்கி அமைந்திருக்கின்றன.
   (b) அவற்றுள் சில கோட்டுத்துண்டுகள் வெட்டிக்கொள்கின்றன.
4) எனவே, இங்கு உள்ள கோடுகள் அனைத்தும் சர்வசமக் கோட்டுத்துண்டுகள். இதனை உதாரணமாக, $e = f$ எனவோ அல்லது $e \cong f$ எனவோ குறிப்பிடுகின்றோம்.

### சர்வசமக் கோணங்கள்




1) இங்கு காண்பிக்கப்பட்டுள்ள எல்லாக் கோணங்களும் $30^\circ$ கோண அளவு கொண்டவை.
2) இரு கோணங்கள் சம கோண அளவு கொண்டவையெனில் அவை **சர்வசமம்** எனக் கொள்ளப்படுகின்றன.
3) கோணங்கள் நோக்கியிருக்கும் திசை, அவற்றின் பக்கங்களின் நீளம், பக்கக்கோடுகளின் திண்ணம் போன்று வேறு எந்தப்பரிமாணமும் கோணங்களின் சர்வசமத் தன்மையை பாதிப்பதில்லை.
4) எனவே, இங்கு உள்ள கோணங்கள் அனைத்தும் சர்வசமம் ஆகும். இதனை உதாரணமாக,
   $\angle x = \angle y$ எனவோ அல்லது
   $\angle x \cong \angle y$ எனவோ குறிப்பிடுகின்றோம்.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/0wMEFuj3yuY

## Information Rights & Disclaimers


Sum & solution prepared on Monday 16th January, 2023 :: 19:34 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**